திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு கல்விக் கடன்—*corporate company–*களை வைத்து வசூலித்து வருவதால் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, கல்விக் கடனை இரத்து செய்ய திராவிட முன்னேற்றக் கழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

(ஈ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி மற்றும் வேப்பனஹள்ளி தொகுதிகள், யானை தாக்கி இறந்தவர்களுக்கு நிவாரணம் மற்றும் ஆலங்குளம் தொகுதி, காட்டுப் பன்றிகளால் பயிர்கள் பாதிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்துவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி, ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம் இரண்டு மாநிலங்களின் எல்லைப் பகுதியாக இருக்கிற காரணத்தினால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். வேறு விஷயம் இல்லை. முடிந்துவிட்டது.*

திரு. கே.பி. முனுசாமி: *அதே* subject *தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கான பதிலையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். வேறு விஷயம் இருந்தால், பிறகு பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) அதற்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.*

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் எங்கள் முதலமைச்சர் அவர்களை வணங்கி, 2021–2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

2021 செப்டம்பர் 13]

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) நான் அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 1 முதல் 3 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.R. *இராஜா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். 2021–2022 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 1 முதல் 3 வரையிலான மூன்று அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 10–20

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞரணிச் செயலாளர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 1–வது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.